பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆவணி 9 (24—8—68) சனி ★ வெளியூர்: ஆவணி 10 (25—8—68) ஞாயிறு [இதழ்: 60

கடற்கரையில் நிரந்தர மேடை

சீரணியினர் உருவாக்குவர்

சென்னை — திருவல்லிக்கேணிக் கடற்கரையில் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கான நிரந்தர மேடையொன்றை, சீரணித் தொண்டர்களைக்கொண்டு அமைக்கும் திட்டம் பற்றி அரசுக்கு யோசனை இருப்பதாக பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. கருணாநிதி சட்டமன்ற மேலவையில் கேள்வி நேரத்தின்போது கூறினார்.

மூன்று இடங்களில்....

நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள்

தமிழகத் தி. மு. கழக அமைச்சரவைமீது சட்டசபைக் காங்கிரசுக் கட்சித் தலைவர் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்துள்ளார்.

தி. மு. கழக அமைச்சரவைமீது முதல் தடவையாக இதைக் கொண்டுவந்துள்ளார்கள் என்பது தவிர, இதில் ஆச்சரியப்படுவதற்கோ, அச்சப்படுவதற்கோ எதுவும் கிடையாது.

சனநாயக முறையில், அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது சட்டமன்ற உரிமைகளில் ஒன்று. தமிழகச் சட்டமன்றக் காங்கிரசுக் கட்சியினர் இந்த சனநாயக முறையைப் பயன்படுத்தியுள்ளனர்.

கறுப்புத் துணியை வீசுவது -- முக்காடிட்டு முகாரி எழுப்புவது -- குறித்த வழியை விட்டு வேறு வழியில் திடீரெனப் பாய்ந்து செல்வது -- கொடிக் கம்பைத் தடிக்கம்பாக ஆக்குவது -- இப்படிப்பட்ட நடவடிக்கைகளை நீடிக்காமல், சனநாயக முறையில் காங்கிரசுக்காரர்கள் ஒரு காரியம் செய்கிறார்கள் என்றால், அது வரவேற்கத்தக்கதே! பாராட்[illegible]

அமைச்சரவைமீது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம், இப்பொழுது சட்டமன்றத்தின் கவனத்தில் உள்ளது; காங்கிரசுக்காரர்கள் எழுப்பும் குற்றச்சாட்டுக்களுக்கு அறிஞர் அண்ணாவும், மற்ற அமைச்சர்களும் தக்க பதில் தருவார்கள்; சட்டமன்றத்தில் அது பற்றிய முடிவு வரும்!

நாம் இந்தச் சமயத்தில் தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்று "சலசலப்புக் கண்டு சலியாதீர்" என்பதாகும்.

'சலசலப்பு' என்ற சொல்லைக் கண்டதும், சட்டமன்றத்தில் உள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றியோ, அதுபற்றி எழுந்த விவாதம் பற்றியோ, காரசாரமான பேச்சு பற்றியோ குறிப்பிடுவதாக யாரும் நினைக்கவேண்டாம். 'சலசலப்பு கண்டு சலியாதீர்' என்று கூறுவது நாமல்ல---காங்கிரசுத் தலைவர் காமராசர்!

'சலசலப்பு' என்று காமராசர் குறிப்பிடுவதும், ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றியே! சட்டமன்றத்தில் தி. மு. க. அமைச்சரவைமீது, அவர் சார்ந்த காங்கிரசுக் கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானமல்ல; காங்கிரசுக்காரர்கள், காங்கிரசுத் தலைவர் மீதே--காமராசர் மீதே கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம்! அது பற்றித்தான் காமராசர் பேசியுள்ளார்!

திருச்சி நகரில், பழம்பெரும் காங்கிரசுக்காரர்கள் கூடிய கூட்டத்தில், 'காமராசர் தலைமையில் நம்பிக்கை போய்விட்டது; அவர் வெளியேற வேண்டும்' என்று வெளிப்படையாகப் பேசினார்கள்.

'புதிய காங்கிரசு' என்றும், 'பழைய காங்கிரசு' என்றும் அங்கு பேசப்பட்டது.

கடந்த பொதுத் தேர்தலில், தமிழ் நாடு காங்கிரசுக் கட்சி சேர்த்த---செலவிட்ட ரூ 75 இலட்சம் பற்றிய பேச்சு வந்தது.

புதியதையும் பழையதையும், செலவான பணத்தையும், கிடைத்த பலனையும் கூட்டிக் கழித்து, கடைசியாக, 'காமராசர்மீது நம்பிக்கையில்லை' என்று ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அவர்கள் கொண்டுவந்தார்கள். பழம்பெரும் காங்கிரசுக்காரர்கள், காங்கிரசுத் தலைவர்மீது பொதுக்கூட்டத்தில் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இது!

இந்த 'நம்பிக்கையில்லாத் தீர்மான'த்துக்குப் பதிலளிக்கவந்த காமராசர், கோயம்புத்தூரில் நடைபெற்ற ஊழியர் கூட்டத்தில், 'சலசலப்பு கண்டு சலியாதீர்' என்று ஊழியர்களுக்கு உறுதி கொடுத்துப் பேசியிருக்கிறார்; 'காங்கிரசுக் கட்சியில் ஒரு சாரார் நம்மைத் திட்டுகிறார்கள். இந்தச் சண்டை தெருவுக்கு வந்துவிட்டது' என்று வருத்தப்பட்டும் இருக்கிறார்!

"காங்கிரசுக் கட்சிக்குள் நிலவும் சண்டைச் சச்சரவுகளை மறந்து, நிறுவனம் முழு வலிமை பெறத் தொண்டர்கள் பாடுபட வேண்டும். ஒரு சிலரின் பிளவு மனப்பான்மையால் கட்சியை யாரும் உடைக்க முடியாது" என்றும் காமராசர் அங்கு பேசியிருக்கிறார். இது பத்திரிகைகளில் வெளிவந்த அளவு! பேசியதன் முழு அளவும் விவரமும் நமக்குத் தெரியாது!

காங்கிரசுக் கட்சிக்குள் சண்டை சச்சரவு பலமாக இருக்கிறது --- ஒரு சாரார் மற்றொரு சாராரைத் திட்டுகிறார்கள்---சண்டை தெருவுக்கு வந்துவிட்டது---இவற்றையெல்லாம் காமராசர் மறுக்கவில்லை! ஆனால், 'ஊழியர்கள் இவற்றையெல்லாம் மறந்துவிட வேண்டும்' என்கிறார்!

அவர் செய்த உபதேசம் காங்கிரசு ஊழியர்களுக்கு --- ஊராருக்கு அல்ல!

ஊரார்முன், பழைய காங்கிரசுக்காரர்கள் வைத்த நம்பிக்கையில்லாத் [illegible] காமராசரை அகற்ற முன்வைத்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்னமும் இருக்கிறது!

"பழைய காங்கிரசு--புதிய காங்கிரசு என்ற பேச்சு எதற்கு?" என்று காமராசர் வேறொரு இடத்தில் --- ஆகஸ்டு 20-ல் திருச்சியில்--- பேசியிருக்கிறார்.

'பேசியிருக்கிறார்' என்று கூறுவதைவிட, பத்திரிகை தந்துள்ள தலைப்பு, 'காமராஜ் கண்டனம்' என்பதாகும்!

திருச்சிக் கூட்டத்தில் காமராசர் பல புதிய உண்மைகளை --- 'புதிது, பழையது' என்றாலே அவருக்குக் கோபம் வரலாம்---எனவே, பல பொன்மொழிகளை அருளியிருக்கிறார்:—

"சுதந்தரப் போராட்டத்தின்போது தியாகங்களைச் செய்தவர்கள் அனைவருக்கும் எங்களுடைய வணக்கம் உரியது. அதேசமயம் காங்கிரசில் புதியவர்கள் சேருவதற்கும் ஊக்கம் அளிக்க வேண்டியது அவசியம்"

என்று கூறி,

"கம்யூனிஸ்டுகள், பி. சோ. போன்று பல்வேறு கட்சியினர் ஆரம்பத்தில் காங்கிரசில் இருந்தவர்களே -- அவர்கள் மீண்டும் காங்கிரசில் சேர விரும்பினால் யார் குறுக்கே நிற்க முடியும்?"

என்றும் கேட்டிருக்கிறார்.

பழைய காங்கிரசுக்காரர்கள் தந்த 'நம்பிக்கையில்லாத் தீர்மான'த்துக்குப் பிறகு, புதிய காங்கிரசுக்காரர்களுக்குப் பாதுகாப்புத் தந்ததுடன், 'வெளியிலுள்ளவர்களும், கம்யூனிஸ்டுக் கட்சியினரும், பி. சோ. கட்சியினரும்கூடக் காங்கிரசுக்குள் வரவேண்டும்' என்று காமராசர் பேசியுள்ளார் -- அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்!

காமராசர் திருச்சிப் பொதுக்கூட்டத்தில், ஆகஸ்டு 20-ம் நாள் அழைப்பு விடுத்தார் -- பி. சோ. கட்சியினருக்கு; ஆகஸ்டு 22-ம் நாள் டெல்லியிலிருந்து செய்தி வருகிறது -- 'பி. சோ. கட்சியிலிருந்து விலகிக் காங்கிரசில் சேர்ந்து, மத்திய அமைச்சராக இருந்த அசோக் மேத்தா, தமது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார்' என்று!

அங்கேயும் ஒருவகையான 'நம்பிக்கையில்லா'த் தீர்மானம் --- அதன் விளைவு, அந்தப் பதவி விலகல்!

செக் நாட்டிற்குள் இரஷ்யப் படைகள் புகுந்து ஆக்கிரமிப்பு நடத்தியதையொட்டி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில், முன்னாள் உத்தரப்பிரதேச முதலமைச்சராக இருந்து, தற்பொழுது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் திருமதி சுசேதா கிருபளானி,

(4-ம் பக்கம் பார்க்க)

புதுவை அமைச்சரவை கவிழ்கிறது

பரூக் மரைக்காயர் தலைமையில் ஐ. மு. அமைச்சரவை?

காங்கிரசு அமைச்சர்கள் டில்லிக்குக் காவடி

புதுடில்லி, ஆக 23— **புதுவை காங்கிரசு அமைச்சரவைக்கு மீண்டும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.**

புதுடில்லிக்குச் சென்றிருந்த ஆளுநர் திரு. சீலம் இன்று திரும்பினார். பொதுப்பணி யமைச்சர் திரு. சண்முகமும், நிதியமைச்சர் திரு. காங்கேயனும் நேற்றிரவு டில்லிக்கு விரைந்தனர்.

தற்போது சட்டமன்றச் காங்கிரசுக் கட்சியிலிருந்து 5 அல்லது 6 பேர் விலகி ஐக்கிய முன்னணியில் சேர்ந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் ஐக்கிய முன்னணியின் பலம் 16 அல்லது 17 ஆக உயர்ந்திருக்கிறது. மொத்தம் அவைத் தலைவர் உட்பட 30 உறுப்பினர்களைக் கொண்டது புதுவை சட்ட மன்றம்.

புதிதாக வந்துசேர்ந்தவர்களும் அடங்கிய ஐக்கிய முன்னணிக் கட்சிக் கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் திரு. பரூக் மரைக்காயர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறாராம்.

ஐக்கிய முன்னணி அமைச்சரவை அமைக்கக்கூடிய நிலைமை உருவானால், அமைச்சரவையில் தங்களுக்கு இடம் வேண்டியதில்லை என்று முன்னாள் முதலமைச்சர் குபேரும், கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் சுப்பையாவும் கூறிவிட்டதாகத் தெரிகிறது.

பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டுதான் இருக்கும் இந்த நேரத்தில், புதுவை அரசியலில் கருமேகம் சூழ்ந்துள்ளது.

புதுவைச் சட்ட மன்றத்தை ஆகஸ்டு 29-ம் நாள் கூட்டுவதற்கு அழைப்பு அனுப்பியிருக்கிறார்— ஆளுநர்.

தப்புப் பிரச்சாரம் பலன் தராது!

எதிர்க் கட்சியினருக்கு அண்ணா இடித்துரை

கழக ஆட்சி நாத்திகத்தைப் புகுத்துவதாகக் குற்றஞ்சாட்டிப் பேசிய எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமனுக்கு, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பதிலளித்து இன்று சட்டமன்றத்தில் குறிப்பிட்டதாவது:—

"அரசாங்க அலுவலகங்களில் கடவுள் படங்கள் மாற்றப்படுவது குறித்துப் பேசிய எதிர்க் கட்சித் தலைவர், நாங்கள் ஏதோ நாத்திகக் கொள்கையை மக்கள்மீது திணிப்பது போலப் பேசினார்; அது மட்டுமல்ல; இரணியனுக்கு ஏற்பட்ட கதிதான் எனக்கும் ஏற்படும் என்று ஒரு கதையையும் சொன்னார்.

"இரணியன்—பிரகலாதன் கதை அவருக்குத் தெரிந்திருப்பது போலவே எனக்கும் தெரியும் என்பதை எதிர்க் கட்சித் தலைவர் உணர்ந்திருப்பார் என்று கருதுகிறேன்.

"அந்தக் கதை தெரிந்திருந்தும், அப்படி நான் செய்வேன் என்று அவர் எதிர்பார்க்கிறார் என்றால், அவரது நிலைக்காக நான் மிகவும் பரிதாபப்படுகிறேன்.

"ஆத்திகம் என்பது சில இடங்களில் சாமியின் படங்களை மாட்டி வைப்பதாலோ, மாற்றுவதாலோ ஏற்படுவது அல்ல; அது, உள்ளத்திற்குள்ளேயே ஏற்படுகின்ற உணர்வு. ஆகவே, அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

"இந்த அரசு, ஆத்திக எண்ணம் கொண்டவர்கள் மனம் புண்படும்படியான எந்த ஒரு செயலையும் செய்ததில்லை என்பதை நினைவுபடுத்துகிறேன். அது மட்டுமல்ல; ஆத்திக எண்ணம் கொண்டவர்கள் கொண்டாடுகின்ற பல்வேறு திருவிழாக்கள் -- மகாமகம் போன்ற பண்டிகைகளுக்கு -- அரசாங்கம் உதவி புரிந்ததை இந்த நாடறியும்; நல்லவர்கள் உணர்வார்கள்.

"ஆகவே, அரசாங்க அலுவலகங்களில் கடவுள் படங்களை மாட்டுவதால், 'இரணியன் போல் ஆகிவிடுவேன்' என்று கூறுவதென்பது, 'எப்படியாவது இவன் அழியமாட்டானா' என்ற அவர்களது ஆசையைத்தான் காட்டுமே தவிர, உண்மையில் எங்களை யாரும் தவறாகக் கருதமாட்டார்கள்!

"மேலும் அவர், கதையைக் கூறியபோது, எங்களை அவர்களால்கூட அழிக்க முடியாது என்றும், எங்களுக்குப் பிள்ளைகள் பிறந்து அவர்களால்தான் அழிவோம் என்றும் கூறினார். அப்படியே நாங்கள் எங்கள் பிள்ளையின் கையால் அழிந்தாலும், 'சிலாக்கியமான முக்தி' என்று --- புராணத்தில் கூறுவதுபோல் --- பெருமையடையக்கூடியவர்களாகத்தான் இருப்போம்!

"ஆகவே, இதை வைத்துக் கொண்டு, நாங்கள் நாத்திகத்தைப் புகுத்துவதாகப் பிரச்சாரம் செய்வது ஒருவிதப் பலனையும் தராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

தலைமை அமைச்சர் தந்த விளக்கம் மனநிறைவைத் தராததன் விளைவு!

நாடாளுமன்ற இரு அவைகளிலும் எதிர்க் கட்சியினர் வெளிநடப்பு

'நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டது அரசு' எனக் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஆக. 23—

செக்கோஸ்லோவேகியாவில் இரஷ்யப் படையெடுப்பைக் கண்டித்து ஐ. நா. பாதுகாப்பு சபையில் மேலைநாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தின்மீது நடைபெற்ற வாக்கெடுப்பில் இந்தியா கலந்துகொள்ளாததற்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கம்யூனிஸ்டு அல்லாத எதிர்க் கட்சிகளின் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இது சம்பந்தமாகத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அளித்த விளக்கம் அவர்களுக்கு மனநிறைவைத் தரவில்லை. இரு அவைகளிலும் கம்யூனிஸ்டு அல்லாத எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

"செக்கோஸ்லோவேகியா பற்றிய ஐ நா. பாதுகாப்பு சபை தீர்மானத்தில் சோவியத் யூனியனின் செயலை சபை 'கண்டிக்கிறது' என்ற ஒரு வார்த்தை இருந்ததால்தான் இந்தியா வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை" என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி மாநிலங்களவையில் கூறினார்.

"ஒவ்வொரு பாராவாகத் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டிருந்தால், 'கண்டிக்கிறது' என்ற வார்த்தை உள்ள பாராவைத் தவிர மற்ற எல்லா பாராக்களையும் ஆதரித்து இந்தியா வாக்கு அளித்திருக்கும்" என்றார்.

செக் மக்களுக்கு இந்தியாவின் ஆதரவைத் தலைமையமைச்சர் உறுதி செய்தார். 'செக் மக்களுக்கு நாம் உதவி செய்யக்கூடியதைக் கடினமானதாக்கக்கூடிய எந்த நிலையையும் நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது' என்றார்.

இந்தியா ஏன் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லையென்று தலைமையமைச்சர் விளக்கிக்கொண்டிருந்தபோது சில இடைமறிப்புகள் ஏற்பட்டன; 'அவ்வளவு கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தியிராவிட்டால் இந்தியா தீர்மானத்தை ஒப்புக்கொண்டிருக்கும்' என்று இந்திரா காந்தி கூறினார்.

விளக்கம் தந்துவிட்டு தலைமையமைச்சர் உட்கார்ந்தவுடன், ஐ. நா. வாக்கெடுப்பில் இந்தியா கலந்துகொள்ளாததை எதிர்த்து சுதந்திரக் கட்சி, பி. சோ. கட்சி, ச. சோ. கட்சி, ஜனசங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

"நாட்டையும், இந்த மாமன்றத்தையும் அரசு காட்டிக் கொடுத்துவிட்டது" என்று உரத்த குரலில் கூறிக்கொண்டு சுதந்திரக் கட்சித் தலைவர் தயாபாய் பட்டேல் வெளியே சென்றார்.

"வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வேண்டாமென இந்திய அரசு, ஐ. நா.-வில் உள்ள தமது பிரதிநிதிக்கு உத்தரவிட்டது என்பது, தலைமையமைச்சர் பதிலிலிருந்து நன்றாகத் தெரிகிறது" என்றார் ஜி. முரகரி.

"அரசு, மக்களை ஏமாற்றிவிட்டது; விவாதத்தில் கலந்துகொள்ளுவதில் அர்த்தமில்லை" என, பி. சோ. தலைவர் முல்கா கோவிந்த ரெட்டி சொன்னார்.

"சோவியத் அரசின் கொள்கையைக் கண்டிக்க இந்த அரசுக்குத் துணிவில்லை" என்றார் இராஜ் நாராயண்.

மக்களவையில் மனக்கொதிப்பு

சமாதானம் கூறுமாறு உறுப்பினர்கள் வற்புறுத்தல்

நடவடிக்கைகள் எதுவும் 2-மணி நேரம் நடைபெறவிடாமல் செய்துவிட்டனர்

புதுடில்லி, ஆக. 23—

செக்கோஸ்லோவேகியாவில் சோவியத் தலையீட்டைக் கண்டிக்கும் ஐ. நா. தீர்மானத்தின் வாக்கெடுப்பில் இந்தியா கலந்துகொள்ளவில்லை என்ற செய்தி, மக்களவையில், கம்யூனிஸ்டு அல்லாத எதிர்க் கட்சியினரிடையே மிகுந்த ஆத்திரத்தைக் கிளப்பியது.

இடைவேளைக்குப் பிறகு சபை கூடியபோது, சபையில் எந்த அலுவல்களையும் கவனிக்க முடியாதபடி எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தடை செய்தனர்; 'செக்கோஸ்லோவேகியா வாழ்க'—'டூப்செக் வாழ்க' என்று ஓயாமல் முழக்கமிட்டுக் கொண்டே இருந்தனர்.

ஒரு அந்நிய நாட்டுக்கு நாடாளுமன்றத்தில் இவ்வளவு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கப்படுவது, இதுவே முதல் தடவையாகும்.

"ஐ. நா. தீர்மானத்தின் வாக்கெடுப்பில் இந்தியா ஏன் கலந்துகொள்ளவில்லை என்பதற்குச் சமாதானம் கூற வேண்டும்" என்று உறுப்பினர்கள் பிடிவாதமாக வற்புறுத்தினர்.

அடுத்த வார அலுவல்களை அமைச்சர் அறிவிப்பதற்கு உறுப்பினர்கள் அனுமதிக்க வேண்டுமென துணை அவைத் தலைவர் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் உறுப்பினர்கள் பொருட்படுத்தவில்லை.

நாடாளுமன்ற அலுவல்களை அறிவிக்க டாக்டர் ராம் சுபாக்சிங் எழுந்திருந்தபோது அவரைப் பேசவொட்டாமல் உறுப்பினர்கள் இடைமறித்துக்கொண்டே இருந்தனர்.

சுமார் இருபது நிமிடம் வரையில், சபையில் ஒரே அமர்க்களமாக இருந்தது.

முடிவில், ஐ. நா. வாக்கெடுப்பு பற்றிய பிரச்சினையை அவையில் எழுப்ப ஜனசங்கத் தலைவர் வாஜ்பேயருக்கு அனுமதி தரப்பட்டது.

எதிர்க் கட்சியினர், இரண்டு மணி நேரம் சபையின் நடவடிக்கை எதுவும் நடக்கவொட்டாமல் செய்துவிட்டனர்.

'செக்கோஸ்லோவேகியா வாழ்க'—'டுப்செக் வாழ்க' என்று இடைவிடாமல் முழக்கமிட்டு, அவையை ஒத்திவைக்கும்படி செய்ய அவர்கள் முயற்சித்தனர்; ஆனால் இறுதியில் அவைத் தலைவர் சஞ்சீவ ரெட்டி யோசனையை ஏற்று, ஐ. நா. அவையில் இந்தியாவின் நிலை பற்றித் தலைமையமைச்சர் விடுத்த அறிக்கை மீது விவாதம் நடத்த ஒப்புதல் அளித்தனர்.

நடவடிக்கை நடக்காமலிருந்த அந்த இரண்டு மணி நேரத்தில் தலைமையமைச்சர், மேலவையிலிருந்து இரண்டு தடவை அழைக்கப்பட்டு மக்களவைக்கு வந்தார்.

மிகவும் கொதிப்படைந்திருந்த ஒரு ஜனசங்க உறுப்பினரை, அவையிலுள்ள முதியவர்கள் சமாதானப்படுத்தி அடக்கிவைத்தனர்.

ஆத்திரமடைந்த ஒரு வலதுசாரி கம்யூனிஸ்டு உறுப்பினர், செருப்பை எடுத்து ஆட்டியதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

நாட்டின் கௌரவத்துக்கு உரிய விதத்தில் நடந்துகொள்ளுமாறு உறுப்பினர்களுக்கு வேண்டுகோள்கள் விடப்பட்டன.

"இந்திய அரசு இரஷ்யாவுக்குப் 'பணிந்து நடப்பது பற்றி மக்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பளிக்கும் பொருட்டு, நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடவேண்டும்" என்றும் ஒரு யோசனை கூறப்பட்டது.

அவை மீண்டும் கூடியதும் நிகழ்ச்சிகள் விறுவிறுப்படைந்தன; பல உறுப்பினர்கள் ஒரே சமயத்தில் எழுந்து நின்று பேச விரும்பினர்.

நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் சுருக்கமாக ஒரு அறிக்கை விடவேண்டும் என்று தலைமைதாங்கிய துணை அவைத் தலைவர் விரும்பினார்; 'ஐ. நா-வில் இந்தியாவின் நிலைபற்றிய விவாதத்தைத்தான் அனுமதிக்க முடியும்; மற்ற எந்த நடவடிக்கையையும் அனுமதிக்க முடியாது' என்று எதிர்க்கட்சியினர் கூறிவிட்டனர்.

பாதுகாப்புக் கவுன்சிலில் ஓட்டெடுப்பில் இந்தியப் பிரதிநிதி கலந்துகொள்ளவில்லையென்று வானொலியில் கேட்டதாகவும், 'செக்கோஸ்லோவேகியாவில் ஐ. நா. சாசன உரிமைகளைப் பாதுகாக்க இந்தியா முயற்சி செய்யும்' என்று தலைமையமைச்சர் கொடுத்த வாக்குறுதிக்கு இது முரணானது என்றும எதிர்க் கட்சியினா கூறினர்.

அவைக்கு வருமாறு தலைமையமைச்சருக்குச் சொல்லி அனுப்பியிருப்பதாகவும், இதற்கிடையில் திரு. அசோக் மேத்தா பற்றி ராம் சுபாக் சிங் விடுக்கும் சுருக்கமான அறிக்கையை உறுப்பினர்கள் கேட்க வேண்டுமென்றும் துணை அவைத் தலைவர் கூறினார்.

எதிர்க் கட்சியினர், 'முடியாது' என்று கூறினர்.

"அமைச்சர் ராம் சுபாக் சிங்கின் அறிக்கையைத் தவிர வேறு எதுவும் நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்யப்படமாட்டாது" என்று துணை அவைத் தலைவர் கூறினார்.

பின்னர், அமைச்சர் ராம் சுபாக் சிங் பேசினார்; ஆனால் எதிர்க் கட்சியினர், 'செககோஸ்லோவேகியா வாழ்க' என்று முழக்கமிட்டுக்கொண்டே இருந்ததால் அவர் சொன்னது எதுவும் காதில் விழவில்லை!

15 நிமிடங்கள் கழித்து ஜனசங்கத் தலைவர் வாஜ்பேயர், ஒத்திவைப்புப் பிரேரணையை பிரேரித்தபோது அமைதி நிலவியது.

"பாதுகாப்புக் கவுன்சிலில் இந்தியா வாக்கெடுப்பில் கலந்து

(3-ம் பக்கம் பார்க்க)

தவறான தகவல்களையே தந்துகொண்டிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர்!

பொறுப்பை உணர்ந்திருக்கிறேன்-- பேசாமல் இருக்கிறேன்

தீ விபத்துப் பற்றிக் கருத்திருமன் குற்றச்சாட்டுக்கு அண்ணா பதில்

சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசிய எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன், தீ விபத்துக்கள் தொடர்பாக அரசுமீது சாட்டிய குற்றச்சாட்டுக்களை முதலமைச்சர் அண்ணா அவர்கள் மறுத்து விளக்கமளிக்கும் வகையில் இடையிடையே குறுக்கிட்டார்; இருவருக்கும் நடந்த வாக்குவாதம் வருமாறு :—

கருத்திருமன் :— "தீ விபத்துக்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன; சென்னையில் மட்டுமல்ல -- பல இடங்களில் நடைபெறுகின்றன; அதைத்தான் சொல்கிறேன்; 'சட்டம் -- ஒழுங்கு கெட்டுவிட்டது' என்பதற்கு இதைக்கூட ஓர் எடுத்துக்காட்டாகக் கூறமுடியும். ஏழை மக்கள், தங்கள் குடிசைகளில் கூட நிம்மதியாக இருக்க முடியாத நிலை; பாதுகாப்பு இல்லாத ஒரு நிலை; இதனால் சட்டம் ஒழுங்கு என்பது.........

முதலமைச்சர் அண்ணா :—"ஏழைகளுக்குப் பரிந்து பேச எதிர்க் கட்சித் தலைவருக்கு இப்படி ஒரு சந்தர்ப்பமாவது கிடைத்தது குறித்து மிக்க மகிழ்சசியடைகிறேன். தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்டமட்டில் இந்த அரசு அவர்களுக்காக மிகவும் வருத்தமடைகிறது. ஆனால், இந்தத் தீ விபத்துக்களுக்கும், சட்டம் - ஒழுங்குக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்பதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அண்மையில்கூட பம்பாயில், நாலடுக்குக் கட்டிடம் ஒன்றில் தீப்பற்றி, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்துவிட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது; அப்படியென்றால், 'அங்கேயும் இப்படித்தான் சட்டம் -- ஒழுங்கு கெட்டுவிட்டதாக அர்த்தமா' என்பதை எதிர்க் கட்சித் தலைவர்—இங்கே சொல்லக்கூட வேண்டாம்—அவர்களே எண்ணிப் பார்த்துக்கொள்ளட்டும்-"

கருத்திருமன் :—"பழமொழி ஒன்று சொல்வார்கள்; அதைப் போல் முதலமைச்சர் அவர்கள், 'கொட்டைப்பாக்கு என்ன விலை' என்று கேட்டால், 'பட்டுக்கோட்டைக்கு வழி சொல்கிறார்!"

அண்ணா :—"கொட்டைப் பாக்கு என்ன விலை என்று கேட்டால், பட்டுக்கோட்டைக்கு வழிகாட்டினாராம் என்ற பழமொழி வழங்கப்படுவதன் காரணமே, கொட்டைப் பாக்கின் விலை பட்டுக்கோட்டையிலே மலிவாக இருப்பதுதான்!"

கருத்திருமன் :—"தீ விபத்து நிவாரண நிதிக்கு—நாங்கள்கூட எதிர்பார்க்கவில்லை—39 இலட்சம் ரூபாய்வரை சேர்ந்திருக்கிறது; ஆனால், எதற்காக வசூலிக்கப்பட்டதோ அதற்கான குடிசைகள் இன்னும் கட்டப்படவில்லை."

அண்ணா :—"எதிர்க் கட்சித் தலைவர் தவறான தகவல்களையே தருகிறார். வசூலிக்கப்பட்ட பணத்திலிருந்து ஏதும் செய்யாமலில்லை; மயிலாப்பூர்ப் பகுதியிலே—ஆயிரத்து இருநூறோ அல்லது ஆயிரத்து முந்நூறோ—சரியாக நினைவில்லை—ஆரம்பக் கட்டமாக வீடுகள் கட்டப்பட்டு, அவற்றில் மக்களும் குடியேறியிருக்கிறார்கள்.

"இதைத் தவிர, வீட்டு வசதி போர்டார் மூலம் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன; மேலும் இரண்டாயிரம் வீடுகள் கட்டப்படும் தறுவாயில் இருக்கின்றன. நம்மிடம் பணம் இருக்கிறது; ஆனால், அதற்குத் தகுந்தபடி போதுமான இடவசதி இல்லாத நிலை இருக்கிறது. இன்னும் ஐயாயிரம் வீடுகள் கட்டுவதற்கான வசதிகள் இருக்கின்றன.

"நம்மிடம் பணம் சேர்ந்திருக்கிறது. இதிலேகூடப் பணம் தருவதாகக் கூறியவர்களில் சிலர் இன்னமும் தரவில்லை; எதிர்க் கட்சித் தலைவரும் நானும்கூடக் கொடுப்பதாகக் கூறிவிட்டு, இன்னமும் தரவில்லை; ஆகையால், பணம் அல்ல இன்றையப் பிரச்சினை; வீடு கட்ட ஏதுவான புறம்போக்கு நிலங்கள் மிகவும் குறைவு. தனிப்பட்டவர்கள் இடத்தில்தான் அம்மக்கள் வசித்துவருகிறார்கள்.

"இது ஏதோ அரசியல் காரணத்திற்காகக் கூறப்பட்டதாகத் தோன்றுகிறதே தவிர வேறில்லை. ஒருவேளை, 'நாங்கள் சொல்லித்தான் குடிசையில் வசிப்பவர்களுக்கு வீடு கட்டப்பட்டது' என்று வெளியில் இருப்பவர்கள் நினைத்துக்கொள்வதற்காகக் கூறப்பட்டதென்றால், அந்த அரசியல் இலாபத்தைச் சம்பாதித்துக்கொள்வதற்காக நன்றி."

கருத்திருமன் :—"சென்னையில் மட்டுமல்ல—திருச்சியில்; தஞ்சையில்; இதைக் கேட்டால், தனிப் போலீசுப் பிரிவு ஏற்படுத்தப்போவதாகச் சொல்லுவார். 'தீ விபத்துப் பற்றிய அறிக்கை எங்கே' என்று கேட்டால், அதற்கும் அவர் வழக்கமான பதிலைச் சொல்லுவார். இங்கே பல்லாயிரக்கணக்கான குடிசைகள் எரிகின்றன -- கொஞ்சம்கூடப் பொறுப்பு வேண்டாமா?"

அண்ணா :—"பொறுப்பை நான் உணர்ந்திருப்பதால்தான், பேசாமல் இருக்கவேண்டியிருக்கிறது. இதுபற்றிய வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. அந்த வழக்கு விசாரணைக்கு ஊறு

(இதன் தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

தவருன தகவல்—பொருந்தாக் குற்றச்சாட்டு

ஆதாரம் பின்னுல் காட்டுவதாக மழுப்பல்

கருத்திருமன் பேச்சும் அமைச்சர்கள் குறுக்கீடும்

கருத்திருமன்:—"தமிழகத்தில் காங்கிரசுக் கட்சிக் காலத்தில் 'தீக்குச்சி—அப்பளம்—பாய் முடைதல் போன்ற தொழிற்சாலை கள்தான் ஆரம்பிக்கப்பட்டன' என்று முதலமைச்சர் கூறினர். கண்ணை மூடிக்கொண்டு இப்படிக் கூறினரா? நெய்வேலி நிலக்கரித் தொழிற்சாலை, பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற் சாலை, ஆவடி டாங்கித் தொழிற்சாலைகள் போன்ற பத்துப் பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தினேம்."

அண்ணா:—"இவை, மாநில அரசின் நிதியிலிருந்து எழுப்பப் பட்ட தொழில்களா? மத்திய அரசின் நிதியிலிருந்து எழுப்பப் பட்டதா? உங்கள் பட்டியல்—பதினைந்தாண்டுக்காலப் பட்டி யல்! எங்கள் பட்டியல், ஒன்றரையாண்டுக்காலப் பட்டியல்! இதனை ஒப்பிட்டா கூறப் போகிறீர்கள்?"

கருத்திருமன்:—"முதலமைச்சர், பேச்சிலே கெட்டிக்காரர்; கழுவிய மீனில் நழுவிய மீன் போன்றவர், மத்திய அரசோடு நாங்கள் போரிட்டு இந்தத் தொழிற்சாலைகளையெல்லாம் கொண்டு வந்தோம். இவைகள் காங்கிரசு ஆட்சியின் சாதனை அல்லவா?

"இருபதாண்டுகளில் காங்கிரசு சாதித்ததை, ஒன்றரை ஆண்டுகளில் சாதித்திருப்பதாக முதலமைச்சர்தான் கூறினர்; எனவேதான், இந்தச் சாதனைகளைக் கூறி, 'உங்கள் சாதனை என்ன?' என்று கேட்கிறேம்.

"தி. மு. கழக ஆட்சியில் இருபத்து நான்கு மில்கள் மூடப் பட்டிருக்கின்றன—இது தி. மு. க. ஆட்சியின் சாதனை; இதற் குக் காரணம், தெளிவான தொழிற் கொள்கை இல்லை என் பதுதான். சென்னையில் எத்தனையோ தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன; விம்கோ, மெட்டல்பாக்ஸ், டால் மியா சிமெண்டு........."

அண்ணா:—"இவைகளெல்லாம் இப்போது இயங்கிக்கொண்டி ருக்கின்றன. இவர் வாசித்த பட்டியலில் டால்மியா சிமெண்டு கம்பெனிகூட இயங்கிக்கொண்டிருக்கிறது. மூடப்படாத தொழிற்சாலையை மூடப்பட்டிருப்பதாக என் நண்பர் சொன்ன தாகப் பத்திரிகையில் வந்து, நண்பர்மீது தவருன எண்ணம் ஏற்படக் கூடாதென்பதற்காகக் குறுக்கிட்டுச் சொல்கிறேன்!"

கருத்திருமன்:—"தி மு க. ஆட்சியில் 305 வேலை நிறுத்தங்கள் நடந்திருக்கின்றன; இதுதான் முன்னேற்றம், 'இந்து' ஆபீஸ் மூடப்பட்டிருக்கிறது. கண்ணாடிகளை உடைப்பது—இயன் திரங்களை உடைப்பது என்பதையெல்லாம் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

அண்ணா:—"காங்கிரசு ஆளும் மாநிலங்களில், 'டைம்ஸ் ஆப் இந்தியா'—'இந்துஸ்தான் டைம்ஸ்'—இப்படிப் பல பத்திரிகை கள் மூடப்பட்டிருக்கின்றன."

கருத்திருமன்:—"நான் எதிர்பார்த்ததை இப்போதே சொல்லி விட்டார். குற்றச்சாட்டுக்கு எதிர்க் குற்றச்சாட்டுப் பதி லாகாது."

அண்ணா:—"தப்பிப்பதற்காகச் சொல்லவில்லை; சிக்க வைப் பதற்காகச் சொல்கிறேன். இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லா இடங்களிலும் நடப்பதுதான். இப்படியெல்லாம் மற்ற மாநி லங்களில் நடக்கவில்லை; அங்கு திறமையான ஆட்சி நடக் கிறது; இங்கு திறமையில்லாததால் இப்படி நடக்கிறது என்று கூறுவதுதான் முறையா என்பதைச் சுட்டிக்காட்டத்தான் பேசினேன்."

அமைச்சர் சத்தியவாணிமுத்து:—"காங்கிரசு ஆட்சிக் காலத் தில் ஒரு பத்திரிகை மூடப்பட்டு வேறு மாநிலத்தில் போய் ஆரம்பிக்கப்பட்டது; பின்னர் இங்கு துவக்கப்பட்டது."

அமைச்சர் மாதவன்:—"பிற மாநிலங்களைவிடத் தமிழகத்தில் பத்திரிகைத் தகராறுகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சரே பாராட்டியிருக்கிறர். அவர் இட்லி சாப்பிட்டுவிட்டுப் பேசவில்லை; நானும் இட்லி கொடுக்க வில்லை. 'இந்து' அலுவலகத்தை அரசு மூடவில்லை—நிர்வாகம் மூடியிருக்கிறது. அலுவலகம் மூடுதல்—கதவடைப்பு — லாக் அவுட் என்று பலவகை இருக்கிறது. 'இந்து' அலுவலகத்தில் நடந்திருப்பது கதவடைப்பு. ஒரு தொழிலாளியை நீக்கிவிட்ட தால், 'ஏதாவது ஏற்படுமோ' என்று அஞ்சி கதவடைப்புச் செய்திருக்கிருர்கள். இதையெல்லாம் தெரிந்துகொள்ளாமல் இவ்வளவு விரைவில் தொழிலாளர்களைக் கைவிடுவார்கள் என்று நான் நினைக்கவில்லை."

கருத்திருமன்:—"இருபத்தைந்து மில்கள் முழுவதுமாக மூடப் பட்டுவிட்டன. மூடப்பட்ட மில்களில் வேலை செய்த தொழி லாளர்களுக்கு நிதியுதவி தர முதலமைச்சர் ஒப்புக்கொண் டார்."

அறிஞர் அண்ணா:—"தொழிலாளர்களுக்காகப் பரிந்து பேசினர் என்று பத்திரிகையில் வருவதற்கு வேண்டுமானல் இப்படிப் பேசலாம். தொழிலாளர்களுக்கு உதவ விதிமுறைகள் வகுக் கப்படுகின்றன. இடைக்கால நிவாரணத்திற்காக வேலை செய் யும் தொழிலாளர்கள்—பொதுமக்கள்—அரசாங்கம் மூவரும் சேர்ந்து நிவாரண நிதி தர ஏற்பாடு ஆனது."

கருத்திருமன்:—"உங்கள் பத்திரிகைகளின் செய்தியை வைத் துத்தான் கேட்கிறேன். இதே உணவு அமைச்சர் பறக்கிருர்— 'தொழிலாளர் துயர்துடைக்க' என்றெல்லாம் செய்தி போட் டார்கள்.

அண்ணா:—"பத்திரிகைகளில் வருவதை அப்படியே எடுத்துக் கொள்ளக்கூடாது. உணவு அமைச்சர் பறக்கிருர் என்றுல், எங்கே பறக்கிருர் என்று வானத்தைப் பார்க்கக்கூடாது! விமானத்தில் போகிருர் என்று பொருள்!"

கருத்திருமன்:—"உங்கள் பத்திரிகைகளில் வருவது சரியல்ல என்று ஒப்புக்கொண்டதற்காக நன்றி. விலைவாசிகள் ஏறுவ தும் இறங்குவதும் உங்கள் சாதனையல்ல; காங்கிரசு ஆட்சி யால் தொழில் துறையில் இரண்டாவதாக இருந்த இந்த மாநிலம் இன்று பதினெண்ருவது வரிசைக்குப் போய்விட் டது."

அண்ணா:—"எந்த ஆதாரத்தின் அடிப்படையில் இதனைக் கூறு கிருர்? எந்த நிபுணர் அறிக்கையை வைத்துக் கூறுகிருர்?"

கருத்திருமன்:—இதற்கு நான், பின்னர் ஆதாரம் கூறுகிறேன்."

ஏ. பாலசுப்பிரமணியம் (இ. க.):—"எப்போதும், பம்பாய் — கல் கத்தா — சென்னை என்ற வரிசைதான் தொழில் துறையில் இருக்கிறது. இப்போதும் அப்படித்தான் இருக்கிறது. ஏன் அப்படி இருக்கிறது என்பதை நான் பின்னுல் பேசும்போது சொல்கிறேன்."

—சட்டமன்றத்தில்: 23—8—68

ஸ்டேன்ஸ் ஆலை

மீண்டும் திறக்க ஏற்பாடு

கோவை நகரத்திலுள்ள ஸ்டேன்ஸ் ஆலை நிர்வாகத்தினர் 18—6—68 அன்று கதவடைப்புச் செய்தனர். இது சம்பந்தமாக சென்னையிலுள்ள தொழிலாளர் ஆணையாளர் முன்னிலையில் நடை பெற்ற பேச்சுவார்த்தையில் 13—7—68 அன்று ஆலையைத் திறக்க முடிவெடுக்கப்பட்டது ஆனல் அதன்படி திறக்கப்பட வில்லை. 7—8—68 அன்று ஆலை யில் நடைபெற்ற இயக்குநர்கள் கூட்டத்தில் பி என்.பி.எல்.ஆர்எம். பழனியப்ப செட்டியார் தலைமை யில் குழு அமைக்கப்பட்டு ஆலை யைத் திறக்க 28—8—68 அன்று பூசை செய்வதாகவும் இம்மாத முடிவுக்குள் ஆலையைத்தொடர்ந் து நடத்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ள தாகத் தெரியவருகிறது.

வங்கத் தமிழர் சங்கம்

அமைச்சர் முத்துசாமிக்கு வரவேற்பு

சென்னை, ஆக. 22—

வெளிநாடு சென்று திரும்பிய தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கட்கு, வங்கத் தமிழர் சங்கச் சார்பில் மாலையணிவித்து வரவேற் புத் தெரிவிக்கப்பட்டது.

சென்னை வந்துள்ள வங்கத் தமி ழர் சங்கச் செயலாளர் மு. இரா மையா, மற்றும் மேற்படி சங்க அண்ணா மணி விழா மலர்க்குழு அமைப்புச் செயலாளர் மா. செங் குட்டுவன், உறுப்பினர் சா. கணே சன், அன்பில்தர்மலிங்கம், புலவர் மி. ச. நடேசன் ஆகியோர் இன்று காலை அமைச்சர் வீட்டுக்குச் சென்று மாலையணிவித்து வரவேற் புத் தெரிவித்தனர்.

அமைச்சர் அவர்கள், விரைவில் கல்கத்தா வருவதாகவும், அப் போது வங்கத் தமிழர் சங்கத்திற் கும் வருகை தருவதாகவும் உறுதி யளித்தார்.

வருந்துகிறேம்

அண்மையில் நடைபெற்ற வட் டக்கழகத் தேர்தலில் தஞ்சை மாவட்டக் கழக உறுப்பினராகத் தேர்வு பெற்றவரும், அரசர்குளம் கிளையின் வட்டப் பிரதிநிதியும், நீண்டகால கழகச் செயல் வீரரு மான கே. ஆர். நடராசன், 13—8—68-ல் தமது 28-வது வயதில் இயற்கையெய்திவிட்டார். அவர் மறைவிற்கும், அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தி. மு. க. சார்பில் தெரிவித்துக்கொள்ளப் படுகிறது.

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்,

மூங்கில்துரைப்பட்டு அஞ்சல், தென் ஆற்காடு மாவட்டம்

ஆலையின் உற்பத்தித் திறனை 1000 டன்னிலிருந்து 1,250 டன்னுக்குப் பெருக்கு வதற்காகப் புதிய பங்குகள் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டுறவு நிறுவனத்தின் விவகார எல்லையில் தென் ஆற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி தாலுக்காவும்—திருக்கோயிலூர் தாலுக்காவில் எலவானூருர், உளுந் தூர்பேட்டை, திருக்கோயிலூர், மணலூர்பேட்டை ஆகிய நான்கு பிர்க்காக்களும்—வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருவண்ணாமலை, செங்கம் ஆகிய இரண்டு தாலுகாக்களும் அடங்கியுள்ளன.

இதில் திருக்கோயிலூர் பிர்க்காவிலுள்ள புதுப்பாளையம், குன்னத்தூர், கொடி யூர், வீரணம்புத்தூர், பாவந்தூர், அக்கனூர், பெண்ணைவலம் ஆகிய கிராமங்களும்— உளுந்தூர்பேட்டை பிர்க்காவில் திருவெண்ணெய்நல்லூர்—உளுந்தூர்பேட்டை ரோட்டிற் குக் கிழக்கில் உள்ள கிராமங்கள் நீங்கலாக மற்ற கிராமங்களில் இருப்பவர்கள்—புதி தாக ஆலையில் பங்கு எடுத்துக்கொள்ள விரும்பும் நபர்களும், ஏற்கனவே ஆலையில் அங்கத்தினர்களாக இருப்பவர்கள் மேற்கொண்டு பங்குகள் தேவையாக இருப்பின் அவர்களும் 21—9—68-ந் தேதி மாலை 5 மணிக்குள் ஆலையில் ஒரு பங்குக்காக ரூ. 255 வீதம் தொகையைச் செலுத்தி மனுச் செய்துகொள்ளலாம்.

என். சீனிவாசன், பி.ஏ.

பொது நிர்வாகி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரக்கூடாது என்பதால்தான் அந்த அறிக்கை வெளியிடப் படவில்லை. ஆகவே, அந்த அறிக்கையை வெளியிடுவதால் எங்களுக்கு ஒன்றும் சங்கடம் நேர்ந்துவிடாது; அதற்கு அர சியல்கூட ஒரு காரணமாக இருக்கலாமென்று யூகிக்கக்கூடிய வகையில் அந்த அறிக்கை இருக்கலாம். ஆகவே, வழக்கு இருப்பதால்தான் அந்த அறிக்கை வெளியிடப்படவில்லை என் பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். அந்தப் பொறுப்பை உணர்ந்திருப்பதால்கான், அறிக்கை வெளியிடப் படவில்லை என்பதையும் தெரியப்படுத்திக்கொள்கிறேன்."

கருத்திருமன்:—"ஏதோ அந்த அறிக்கை வெளியிடப்பட்டால் நாங்கள் அஞ்சவேண்டி வரும் என்பதைப்போல மிரட்டு கிருர்."

அண்ணா:—"எதிர்க் கட்சித் தலைவருக்கும் அவரது கட்சியின ருக்கும் ஆறுதலுக்காக ஒன்று கூறுவேன். எந்த ஓர் அரசி யல் கட்சியும் திட்டமிட்டுச் செய்த காரியமல்ல என்பதைத் தான் அறிக்கை வலியுறுத்தி வருகிறது."

கே. விநாயகம்:—"அண்மையில் இந்த மன்றத்தில் நீங்கள் ஒரு கிழவி கதை கூறினீர்களே—அதுவும் பொய்தானா?"

அண்ணா:—"அந்த மூதாட்டி சொன்னதும் உண்மை; அப்படி ஒரு கருத்து மக்கள் இதயத்தில் இருப்பதும் உண்மை; ஆனல், இந்தச் சம்பவங்கள் ஒரு கட்சியும் திட்டமிட்டுச் செய்ததல்ல என்பதும் உண்மை; ஆனல் அரசியல் காழ்ப் புக் கொண்டவர்கள் சிலர் செய்திருப்பார்கள் என்றுதான் மக்கள் பேசிக் கொள்கிருர்கள்."

வெங்கிடங்கால் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா

25—8—68 பிற்பகல் 3 மணி யளவில் கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெங்கடங் கால் பள்ளியின் புதிய கட் டிடத்தை, ஒன்றியத் தலைவர் எஸ். சண்முகசுந்தரம் தலைமையில் அமைச்சர் மு. கருணாநிதி திறந்து வைப்பார்; அறிஞர் அண்ணா உருவப் படத்தை அன்பில் தர்ம லிங்கமும்; இரா. நெடுஞ்செழி யன் உருவப்படத்தை ப. நாரா யணசாமியும்; மு. கருணாநிதி உரு வப்படத்தை கோ. சி. மணி எம்.எல்.சி.-யும் திறந்துவைப்பர்; மாவட்ட ஆட்சியாளர் சி. ஜி. ரெங்கபாஷ்யம், அ. அண்ணாமலை, இரா. செழியன் எம்.பி, இரா. இராசன் ஆகியோர் சிறப்புரை யாற்றுவர்.

தலைமை அமைச்சர்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளாமல் இருந்தது, இந்திய மக்கள், இரஷ்யாவின் அடிமை கள் என்று தோன்றும்படிச் செய்துவிட்டது" என்று வாஜ் பேயர் கூறினர். 'இந்தியா மேற் கொண்ட நிலை, தலைமையமைச் சர் அளித்த வாக்குறுதிக்கு முர ணனது' என்றும் கூறினர்.

சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறநிலைய நிர்வாக ஆணையாளர் முன்பாக

மனு எண் 163/68

நிர்வாக அதிகாரி,
ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயில்,
பண்ருட்டி, கடலூர்,
தென்னுற்காடு மாவட்டம்

—மனுதாரர்

தென்னுற்காடு மாவட்டம் கடலூர் வட்டம் பண்ருட்டி கிராமத்தில் இருக்கும் ஸ்ரீ வரத ராஜ பெருமாள் கோவில் நில விற்பனை விஷயமாக—

மேற்படி கோயிலுக்குச் சொந்த மானதும் தென் ஆற்காடு மாவட் டம் கடலூர் வட்டம் பண்ணிகுப்பம் கிராமத்தில் ஆர்.எஸ். நெ. 89-ல் 1·27 செண்ட் அயன் புஞ்சை மற் றும் ஆர்.எஸ். நெ. 91ஏ. 2·58 செண்ட் அயன் புஞ்சை ஆக ஏக் கர் 3·85 செண்ட் நிலத்தினை டால் மியாபுரம் சிமெண்ட் (பாரத்) நிறு வனத்திற்கு ரூ. 12,000 (ரூபாய் பன்னிரண்டாயிரம்) மொத்த விலை யாக நிர்ணயம் செய்து விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் ஆண்டைய இந்து சமய அற நிலையச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்துகொண்ட மனு.

மனு எண் 163/68/டி1/
தேதி 16—8—68

மேற்படி மனு குறித்து ஆணை யர், சென்னையிலுள்ள தமது அலு வலகத்தில் 28—9—68 அன்று முற்பகல் 11 மணிக்கு விசாரணை நடத்துவார்.

2. கருத்துரைகளும் மறுப்புரை களும் எவையேனும் இருப்பின், அவைகளை எழுத்து மூலமாக 27—9—68 அன்று அல்லது அதற்கு முன் இவ்வலுவலகத் திற்கு வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையே னும் இருப்பின் அவைகளை நேரி லும் மேற்குறிப்பிட்ட இடத்தில் தெரிவித்துக்கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
(ஆணையாளருக்காக)

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

25--8--68

நாகை

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு அவுரித் திடலில்; தலைவர்: கே. கே. சித்திரவேலு; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, இரா. செழியன் எம்.பி., மன்னை ப. நாராயணசாமி, இரா. இராசன், இ. வெள்ளத்துரை, அ. சந்தானம், கோ. செல்வராசு, இரா. கல்யாணசுந்தரம், அ. இராசமாணிக்கம் பி.ஏ.பி.எல்., மற்றும் பலர். (மாலை 4-மணிக்கு 14-வது வட்டம் சிங்காரவேலர் படிப்பகத்தை அமைச்சர் கருணாநிதி திறந்துவைப்பார்).

அனுப்பங்குளம்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு காளியம்மன் கோயில் திடலில்; தலைவர்: சி. லிங்கசாமி; பேசுவோர்: வெ. கண்ணன், ஏ. துரைக்கண்ணன், கா. மு. மதார், க. மாரியப்பன், ந. சக்கரையப்பன், மற்றும் பலர்.

திண்டுக்கல்

6-வது வட்ட தி. மு. க. சார்பில் கலைஞர் கருணாநிதி மன்றத் திறப்பு விழா; மாலை 7-மணிக்கு காந்திநகர் -- பழனி ரோடில்; தலைவர்: கே. மாதவன்; மன்றத் திறப்பாளர்: பொன். சீனிவாசன்; கொடியேற்றுபவர்: என். முத்து; அண்ணா படத் திறப்பாளர்: க. வே. விக்கிரமாதித்தராசன்; கருணாநிதி படத் திறப்பாளர்: க. அங்குசாமி எம்.சி.; எம்.ஜி.ஆர். படத் திறப்பாளர்: முகம்மது இசுமாயில் எம்.சி.; சிறப்புரையாற்றுவோர்: ஏ. பி. மனோன்மணி, என். கோபால் மற்றும் பலர்.

புதுக்கோட்டை

நகர 8-வது வட்ட எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு மேல 4-ம் வீதியில்; தலைவர்: சி. ஆர். வீரையா; பேசுவோர்: நன்னிலம் அ. நடராசன், அ. தியாகராசன், கே. ஆர். சுப்பையா, குமாரவேல், கல்யாணசுந்தரம், மருதநாயகம், கோ. சீனிவாசன், சோம. காசிநாதன், நல்லதம்பி, சி. அன்பரசு, ச. இராசகோபால், மற்றும் பலர். இரவு 9 மணிக்கு 'தியாகி தங்கப்பா' எனும் கலை நிகழ்ச்சி நடைபெறும்).

மதுரை

40-வது வட்டார எம்.ஜி.ஆர். மன்ற 2-வது ஆண்டு விழா; மாலை 7 மணிக்கு தெற்குவெளி வீதி ராமு பிள்ளை சந்து முன்பாக; தலைவர்: என். நாராயணசாமி; பேசுவோர்: கு. திருப்பதி, எஸ். மாணிக்கம். (மணி -- சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்).

திருப்பூர்

6-வது வார்டு தி.மு.க. கிளை --- எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு குமரானந்தபுரத்தில்; தலைவர்: பி.தங்கவேல்; பேசுவோர்: க. அன்பரசு, சு. துரைசாமி எம்.எல்.ஏ., இரா. முருகேசன், கே. எஸ். மணி எம்.சி., ந.கந்தசாமி பி.ஏ.பி.எல்., பழனிசாமி பி.ஏ.பி.டி., மணிமாறன், சோமு, மற்றும் பலர்.

நாகை

மா. சிங்காரவேலர் இலவசப் படிப்பகத் திறப்பு விழா; மாலை 4 மணிக்கு ஆரியநாட்டுத் தெருவில்; தலைவர்: ஜி. தாஸ்; திறப்பாளர்: அமைச்சர் மு. கருணாநிதி; கொடியேற்றுபவர்: மன்னை நாராயணசாமி; பேசுவோர்: அ. சந்தானம், ஆர். கல்யாணசுந்தரம், கே. கே. சித்திரவேலு, ஏ. எஸ். பாண்டியன், பி. கந்தசாமி.

26--8--68

சங்ககிரி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு புளியந்தோப்பு மைதானத்தில்; தலைவர்: எம். ஆர். இராசகோபாலன் பி.ஏ.பி.எல்.; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., மற்றும் பலர்.

புதுவை பெருநகரக் கழக மறு தேர்தல்

புதுவை பெருநகரக் கழக மறு தேர்தல் 1—9—68 ஞாயிறு காலை 10-மணிக்கு புதுவை நகர் அம்பலத்தாடு அய்யர் மடத்து வீதி திருமண மண்டபத்தில் நடைபெறும்.

செயலாளர் ஒருவர், பத்து மாவட்டப் பிரதிநிதிகள் ஆகிய பொறுப்புகளுக்கு மட்டும் மறு தேர்தல் நடைபெறும்.

செயலாளர் பொறுப்புக்கு மட்டும் 28—8—68-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குச் சேரும்வகையில் விண்ணப்பத் தாள்கள் உரிய கட்டணத்துடன் அனுப்பி வைக்கவேண்டும்.

மாவட்டப் பிரதிநிதிகளுக்கு ஏற்கனவே அனுப்பியுள்ள விண்ணப்பத் தாள்களின் அடிப்படையில் நடைபெறும். தேர்தல் ஆணையாளர்: தோழர் கே. கோவிந்தசாமி எம்.சி.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

குழுக் கூட்டங்கள்

சென்னை- மயிலை

சென்னை மயிலைப் பகுதி தி.மு.க. கூட்டம் 25—8—68 பிற்பகல் 2 மணிக்கு, பகுதிக் கழக அலுவலகத்தில் நடைபெறும்; அண்ணா மணிவிழா பற்றி ஆலோசிக்கப்படும்; பகுதி உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு பகுதிச் செயலாளர் எஸ். வி. வேலு கேட்டுக்கொள்கிறார்.

சென்னை 94-வது வட்டம்

"கிளைக் கழக--சார்பு மன்ற நிர்வாகிகள், பொது உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் கூட்டம், 25—8—68 இரவு 8-மணிக்கு தாமஸ் ரோடு நாவலர் மன்றத்தில் நடைபெறும்" என்று செயலாளர் ந. மு. வாமனன் அறிவிக்கிறார்.

சென்னை 62-வது வட்டம்

"கிளைக் கழக--சார்பு மன்றத் தோழர்கள் கூட்டம், 25—8—68 காலை 10-மணிக்கு சமூகப் பணிமனையில் நடைபெறும்" என்று செயலாளர் திராவிடமணி அறிவிக்கிறார்.

சென்னை பூங்கா நகர்

"பூங்கா நகர்ப் பகுதி தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம் 25—8—68 காலை 10-மணிக்கு சென்னை புதிய 38-வது வட்டம் ஒற்றைவாடைத் தெரு, 105-எண்ணுள்ள இடத்தில் நடைபெறும்" என்று பகுதிச் செயலாளர் டபிள்யூ. பி. பி. சுந்தரம் அறிவிக்கிறார்.

சென்னை 99-வது வட்டம்

"என். எஸ். கே. நினைவு மன்ற உறுப்பினர் மற்றும் கழக ஆதரவாளர்கள் கூட்டம் 25—8—68 மாலை 7-மணிக்கு நடைபெறும்" என்று செயலாளர் அறிவிக்கிறார்.

தமிழ்க்குடிமகன்
சுற்றுப் பயணம்

ஆகஸ்: 24-கோதண்டராம பட்டணம்; 28: எஸ். கொடிக்குளம்; 30: சாயல்குடி; செப். 2: பரமக்குடி; 16: திண்டுக்கல்; 21: வடசேரி (நாகர்கோயில்) 28: பீமநகர் (திருச்சி)

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

'ஐ. நா. இலட்சியத்தை முறியடிக்கும் வகையில் செக் நாட்டின்மீது இரஷ்யா நடத்திய ஆக்கிரமிப்புப் படையெடுப்பை வன்மையாகக் கண்டிக்க வேண்டும்' என்று ஒரு திருத்தம் கொண்டுவந்தார்; இந்தத் திருத்தத்தைத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி ஏற்றுக்கொள்ளவில்லை. கட்சித் தலைவர் கூறியதையும் கேட்காமல், தனது திருத்தத்தைத் திருமதி சுசேதா கிருபளானி வலியுறுத்தினர்; எதிர்க் கட்சிகள் அதை ஆதரித்தன; காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த திருமதி சுசேதா கிருபளானி, திரு. சாந்திலால் ஷா (முன்பு பம்பாய் அமைச்சராக இருந்தவர்), திரு. துளசிதாஸ் தாசப்பா, பாடியாலா மகாராணி ஆகியோர் காங்கிரசுக் கட்சிக்கு எதிராகவே வாக்களித்தனர். இது மட்டுமல்ல; மத்திய அமைச்சர் அசோக் மேத்தாவும் திருத்தத்தை ஆதரித்து வாக்களித்தார்; அதாவது, காங்கிரசுத் தலைமைக்கு எதிராக ஒட்டளித்தார்!

தலைமையமைச்சர் இந்திரா காந்தி, சிவப்புப் பொத்தானை அழுத்துகிறார்! பெட்ரோலியம் அமைச்சர் அசோக் மேத்தா, பச்சைப் பொத்தானை அழுத்துகிறார்!

தலைமையமைச்சருக்கு எதிராகப் பெட்ரோலியம் அமைச்சர் அசோக் மேத்தா வாக்கு போடுகிறார்!

தலைமையமைச்சருக்கு எதிராக மற்றொரு அமைச்சர் வாக்குப் போடுவது இதுதான் முதல் தடவை என்று கூறப்படுகிறது! அந்த முதல் தடவை அற்புதத்தைச் செய்தவர் --- அசோக் மேத்தா! விவாதம் முடிவுற்ற சிறிது நேரத்துக்கெல்லாம் அவர் தமது பதவியை இராஜினாமா செய்துவிட்டார்! திருமதி சுசேதா கிருபளானியும், மற்றும் நான்கு காங்கிரசுக் காரர்கள்---அமைச்சர் அசோக மேத்தா உட்பட---எதிராக வாக்கு அளித்தது, இந்திராவின் வெளிநாட்டுக் கொள்கைக்குத் தெரிவிக்கும் கண்டனமாகும் --- நம்பிக்கையில்லாத் தன்மையாகும்!

மூன்று நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் தரப்பட்டுள்ளன.

ஒன்று --- இன்றையத் தமிழகத்தில் காங்கிரசுக் கட்சியின் முடிசூடாத் தலைவராக இருக்கின்றவரும், முன்பு இந்தியக் காங்கிரசின் முடிசூடிய தலைவராக இருந்தவருமான காமராசர்மீது பழைய காங்கிரசுக்காரர்கள் --- காங்கிரசுத் தியாகிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

இரண்டாவது---தி. மு. கழக அமைச்சரவை மீது சட்டமன்றத்தில் காங்கிரசுக் கட்சியினர் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம்.

மூன்றாவது --- நாடாளுமன்றத்தில், காங்கிரசுக் காரர்கள் --- காங்கிரசு மத்திய அமைச்சர் ஆகியோர், தலைமையமைச்சரின் வெளிநாட்டுக் கொள்கைமீது வெளியிட்ட கண்டனம்!

திருச்சி --- சென்னை --- டில்லி! மூன்று இடங்களில் மூன்று வகையான நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள்! நடவடிக்கைகள் மக்கள்முன் இருக்கின்றன! யார் பக்கம் மக்களின் நம்பிக்கை இருக்கிறதோ, அவர்கள் வெல்வார்கள்!

—இரா. செழியன்

ஆந்திர--கருநாடக மாநில அமைப்புத் தேர்தல்களுக்கான அறிவிப்பு

ஆந்திர மாநிலம்—கருநாடக மாநிலம் ஆகியவற்றின் மாநில அமைப்புக்களுக்கான தேர்தல்கள் முறையே 1968 செப்டம்பர் 10, 11 ஆகிய நாட்களில் நடைபெறும். மற்ற விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

புதுவை மாவட்ட தி. மு. க. தேர்தல்

புதுவை மாவட்டக் கழகத் தேர்தல் 8—9—68 ஞாயிறு காலை 10 மணிக்கு, புதுவை நகர் அம்பலத்தாடு அய்யர் மடத்து வீதி திருமண மண்டபத்தில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

தெ. ஆ. மாவட்டக் கழகத் தேர்தல்

தென் ஆற்காடு மாவட்ட தி.மு. கழகத் தேர்தல் 13—9—68 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சடலூர் (என்.டி.) முனிசிபல் பயணியர் விடுதியில் நடைபெறும். தேர்தல் ஆணையாளர்: தோழர் அப்துல் காதர் பி.எஸ்சி.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நேர்மையுள்ள காங்கிரசுக்காரர்!

'ஒருவராவது இருக்கிறார்' என மேத்தாவுக்குப் பாராட்டு

புதுடில்லி, ஆக. 23— அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துவிட்ட அசோக் மேத்தா இன்று மக்களவைக்குள் வந்தபோது உறுப்பினர்கள் பலத்த ஆரவாரத்துடன் அவரை வரவேற்றனர். இந்த ஆரவாரம் இரண்டு நிமிட நேரம் நீடித்தது.

உறுப்பினர்கள் என்ன சொன்னார்களென்பது அந்த ஆரவாரத்தில் காதில் விழவில்லை; 'மனச்சாட்சியுள்ள -- நேர்மையான ஒரே ஒரு காங்கிரசுக் காரராவது இருக்கிறார்' என்று ஓர் உறுப்பினர் கூறியதுதான் காதில் விழுந்தது!

விழுப்புரம் வட்ட தி.மு.க. தேர்தல்

விழுப்புரம் வட்ட தி. மு. கழகத் தேர்தல் ஏற்கனவே அறிவித்திருந்தபடி, 1—9—68 காலை 10 மணிக்கு, விழுப்புரம் முனிசிபல் பயணியர் விடுதியில் நடைபெறும்.

அவைத் தலைவர் பொறுப்புதவிர, மற்ற எல்லாப் பொறுப்புகளுக்கும் தேர்தல் நடைபெறும். தேர்தல் ஆணையாளர்: தோழர் சா. கணேசன் எம்.சி.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கலை நிகழ்ச்சி

சென்னை 98-வது வட்டம் எம். ஜி. ஆர். குடிசை வாழ்வோர் மன்றச் சார்பில் 25—8—68 ஞாயிறு மாலை 6 மணிக்கு மேற்குப் புதூர் திறந்தவெளித் திடலில்; கோ. அய்யாவு முன்னிலையிலும் — சைதை சம்பந்தம் எம்.சி. முன்னிலையிலும் மணிவண்ணன் — பத்மினி குழுவினரின் 'புயலுக்குப் பின்' எனும் கலை நிகழ்ச்சி நடைபெறும். பேசுவோர்: ந. அண்ணல், பி. கந்தசாமி, மா. ந. செயச்சந்திரன், டி. ஆர். செயராமன், பி. என். இலச்சுமணன், செ. திராவிடமணி, இரா. மாறன், வி. மாரி, கே. எம். பொன்னுசாமி.

அசோக் மேத்தா மீது நடவடிக்கை

காங்கிரசு நாடாளுமன்றக் கட்சி விவாதிக்கும்

புதுடில்லி, ஆக. 23— கட்சிக் கட்டுப்பாட்டை மீறி, நாடாளுமன்றத்தில் வாக்களித்த அசோக் மேத்தா உள்ளிட்ட காங்கிரசு உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி விவாதிக்க, காங்கிரசு நாடாளுமன்றக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் இரண்டொரு நாளில் கூடவிருக்கிறது.

இதில் விவாதிக்கப்பட்ட பின் பேரவைக் கூட்டத்திலும் விவாதிக்கப்படும் என்று தெரிகிறது.

தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி இன்று காலை, கட்சிக் கொறடாவான டாக்டர் ராம்சுபாக் சிங்குடன் இதுபற்றி விவாதித்தார்.

மூன்றும் முறையாக 'சனநாயக' பறிமுதல்

பஞ்சாப் மாநிலத்துக்கு நேர்ந்த கதி

புதுடில்லி, ஆக. 23— இந்தியா சுதந்தரம் பெற்றதற்குப் பிறகு மூன்றாவது முறையாக-பஞ்சாபில் மக்களாட்சி உரிமை பறிக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பெற்றிருக்கிறது பஞ்சாப் மாநிலம்.

1951-ல் முதலமைச்சர் பதவியிலிருந்து டாக்டர் கோபிசந்த் பார்கவா இராஜினாமா செய்ததும் கவர்னர் ஆட்சியின்கீழ் வந்தது -- பஞ்சாப் மாநிலம். கவர்னர் ஆட்சி 1952-ல் நடந்த பொதுத் தேர்தல் வரை நீடித்தது.

பிறகு, 1966 சூலையில் மாநிலச் சீரமைப்புக் காரணமாக முதலமைச்சர் இராம் கிஷன் பதவி விலகியதும், குடியரசுத் தலைவர் ஆட்சியின்கீழ் வந்தது. மாநிலச் சீரமைப்புக்குப்பின் 1966 நவம்பர் முதல் நாள் குடியரசுத் தலைவர் ஆட்சி நீங்கியது.

இப்போது மூன்றாவது முறையாகக் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு பிப்ரவரியில் மறு தேர்தல் நடைபெறுமென்று தெரிகிறது.

குடியரசுத் தலைவர் ஆட்சி ஆறு திங்களுக்கு மேல் நீடிக்கப்படும் அவசியம் ஏற்படாது என்று கூறப்படுகிறது.

பாலர் அரங்கம்
25—8—68 மாலை 2-00, 4-15 மணிக்கு
'காப்டன் சிந்துபாத்'
(எம்.ஜி.எம். கலர் படம்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக; திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-16) [illegible]